RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2442

OPEN ACCESS

# விவிலியத்தில் குணசாலியான பெண்கள்

க.அருண் குமார் [அ, *], பெ.தமிழரசன் [அ]

[அ] தமிழ்த்துறை, பி.எம்.பி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தருமபுரி, தமிழ்நாடு, இந்தியா

# Virtuous women in the Bible

K. Arun Kumar [a, *], P. Thamilarasan [a]

[a] Department of Tamil, P.M.P.Arts and Science College, Dharmapuri-636705, Tamil Nadu, India

* Corresponding Author: arunkumark@gmail.com

Received: 26-05-2024
Revised: 04-08-2024
Accepted: 09-08-2024
Published: 15-08-2024

Check for updates

**ABSTRACT**

Women are the eyes of the country, we know many sayings like Honour women and live with pride. That is why Bharathiyar sings that he should have done great penance to be born as women. Who are the wise women in the biblical as well? Their activities are special for women, such as wisdom, knowledge, wisdom, and what gives beauty to women?.

**Keywords:** Bible, Virtuous, Woman, Wisdom

## முன்னுரை

பெண்கள் நாட்டின் கண்கள், பெண்களைப் போற்றுவோம் பெருமையுடன் வாழ்வோம் என்ற பல்வேறு வாசகங்களை அறிந்திருக்கிறோம் இவ்வுலகம் இயங்குவதற்கு பெண்களின் பங்கு மிகவும் இன்றியமையாதது ஆகும். எனவே தான் பாரதியார் பெண்களாய் பிறப்பதற்கே பெருந்தவம் செய்திருக்க வேண்டுமம்மா என்று பாடுகிறார். விவிலியத்திலும் புத்தியுள்ள பெண்கள் யார்? அவர்களின் செயல்பாடுகள் பெண்களுக்கே சிறப்பான ஞானம், அறிவு, விவேகம் போன்றவைகளும் பெண்களுக்கு அழகைத் தருவது எது? என்ற பல்வேறு வினாக்களுக்கு விடையளிக்கும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

## விவிலியம் ஓர் அறிமுகம்

உலகம் போற்றும் புனித வேதநூல். ஓர் ஆன்மீக கருத்துச் சுரங்கம். இறைவன் நம்மை நேசிக்கிறார். தேவனில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்ற அழியாத பேருண்மையை அழகுற எடுத்துரைக்கும் கர்த்தருடைய வார்த்தையே விவிலியம் ஆகும். ஏறத்தாழ 16000 ஆண்டுகளாக 40 ஆசிரியர்களால் எழுதப்பட்ட 66 நூல்களின் தொகுப்பால் அமைந்த அரிய நூலகமே வேதாகமம் ஆகும்.

இந்த 66 நூல்களும் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்ற இருபெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றை தீர்க்க தரிசிகள் தேவ ஆவியால் நிரப்பப்பட்டு எழுதினர்.

## ஞானமுள்ள பெண்கள்

குணசாலியான பெண்களை கண்டுப்பிடிப்பது மிகவும் அரிது. அவ்வாறு ஒருவன் குணசாலியான பெண்ணை திருமணம் செய்துக்கொண்டால் அந்த பெண்ணின் விலையானது முத்துக்களை பார்பிலும் விலையேற்ப் பெற்றதாகவே விவிலியம் எடுத்துரைக்கிறது. அவள் கணவனின் இதயம் அவளை நம்பும். அவர்கள் குடும்பத்தில் சமாதானமாக வாழ்வதால் கணவனின் மதிப்பு குறையாது. அவள் உயிரோடிருக்கும் நாளெல்லாம் அவனுக்கு தீமையையல்ல, நன்மையையே செய்கிறாள். தன் கைகளினால் உற்சாகத்தோடே வேலை செய்கிறாள். அவள் வியாபாரக் கப்பலைப்போல இருப்பாள். தூரத்திலிருந்து தன் ஆகாரத்தை கொண்டு வருகிறாள். இருட்டோடே எழுந்து தன் வீட்டாருக்கு ஆகாரம் கொடுத்து, தன் வேலைகாரிகளுக்கு படியளக்கிறாள். ஒரு வயலை விசாரித்து அதை வாங்குகிறாள். தன் கைகளின் சம்பாத்தியத்தினால் திராட்சைத் தோட்டத்தை நாட்டுகிறாள். தன்னை பெலத்தால் இடைக்கட்டிக் கொண்டு, தன் கைகளைப் பலப்படுத்துகிறாள். தன் வியாபாரம் பயனுள்ளது என்பதை அறிந்திருக்கிறாள். விவசாயம் செய்து சிறுமையானவர்களுக்கு தன் கையைத் திறந்து, ஏழைகளுக்கு தன் கரங்களை நீட்டுகிறாள். வருங்காலத்தைக் குறித்து மகிழுகிறாள். தன் வாயை ஞானம் விளங்கத் திறக்கிறாள், தயையுள்ள வார்த்தைகளை பேசுகிறாள். அவள் சோம்பேறியாய் இல்லாமல் தன் வீட்டுக் காரியம் எப்படி நடக்கிறது என்று கண்ணோக்காமாய் இருக்கிறாள்.

அவள் பிள்ளைகள் எழுப்பி அவளை பாக்கியவதி என்பார்கள். தன் புருஷனால் புகழப்படுவாள். (நீதி 31 : 15 - 20) பெண் என்றால் அடிமை போன்று வாழ வேண்டும் என்று வேதம் கூறவில்லை. இப்பகுதியில் வரும் பெண்ணிற்கு அப்பெண்ணின் கணவன் எவ்வளவு உரிமைகளைக் கொடுத்திருந்தார் என்பதை தியானித்து பார்த்தால் புரியும். இப்பெண் குடும்பத்தின் பல காரியங்களை நிர்வாகம் செய்தார் என்பதிலிருந்து குடும்பத்திலுள்ள பெண்களுக்கு அவர்கள் திறமைக்கு ஏற்ற பொறுப்புகளை கொடுக்கவேண்டும். அவர்களின் திறமையையும், நற்செயலையும் பாராட்ட வுண்டும் என்பதை உணரமுடிகிறது.

## பெண்களின் பேரழகு

முடியை பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து உயர்ந்த பட்டுடைகளை உடுத்திக்கொள்ளுதல் இவை அழகல்ல. மாறாக அழியாத அலங்கரிப்பாய் இருக்கிற சாந்தம், அமைதியும், தகுதியான உடைகளும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும் தன்னை அவங்கரித்தல் மிகவும் பயனைத் தரும் என்று வேதம் எடுத்தியம்புகிறது.

## வேதத்தில் குணசாலியான பெண்கள்

விவிலியத்தில் பல்வேறு பெண்கள் குணசாலியாக இருந்து பல சாதனைகளை புரிந்துள்ளனர். எடுத்துக்காட்டாக, ரெபெக்காள், அன்னாள், எலிசபெத், தெபோராள், ரூத், நகோமி, எஸ்தர், மரியாள், தொள்காள் போன்றோர் சாதனைப் பெண்களாக குறிப்பிட்டுள்ளனர்.

## தெபோராள்

வேதத்தில் கூறப்பட்டுள்ள ஒரே பெண் நியாதிபதி போர்களம் சென்ற தீர்க்கதரசி. குடும்ப பெண்கள் இறைத்தொண்டு செய்யலாம் என்பதற்கு சவாலாகத் திகழ்ந்தவர்.

## ரூத் - நகோமி

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்? மாமியாருக்கும் மருமகளுக்கும் இணைப்பை உண்டாக்கக் கூடிய மனிதரோ, மழலைச் செல்வங்களோ இல்லாதிருந்தும் ஒருவரை ஒருவர்

மிகுந்த பாசத்துடன் நேசித்த உன்னத உறவு கொண்டவர்கள். ஒருவருக்கொருவர் அக்கறையுடனும் பகிர்ந்து கொண்டும், இணைந்து செயல்பட்டனர்.

## ரெபெக்காள்

அந்நியரை உபசரிக்கக் கூடியவள். இறைவனுக்கு கீழ்படிந்து வாழ்ந்தவள். கடின உழைப்பாளி பிள்ளைகளுக்கிடையில் பாரபட்சம் காட்டினால் அவர்களுக்குள் பகை உண்டாகும் என்பதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர். ரூபவதியாய் இருந்தவள்.

## எஸ்தர் ராஜாத்தி

தனது சூழ்நிலை அறிந்து செயல்பட்டவர் சிறந்த அழகி மட்டுமன்றி அடக்கமும் பணிவுடையவர். தனது நற்பண்பினால் அரசரின் அன்பைப் பெற்றவர். வளர்ப்புத் தந்தைக்கு கீழ்படிந்து நடந்தவள். ஆலோசனையை ஏற்றுக் கொள்ளக் கூடியவர். தெளிவாக சிந்திக்கும் திட்டம் தீட்டி அதை கவனமாக செயல்படுத்தி வெற்றி கண்டார்.

## மரியாள்

துய்மையான வாழ்க்கை வாழ்ந்தவர் சாதாரண குடும்பத்தில் பிறந்தாலும் சிந்தித்து நெயல்படக்கூடியவர். எதிர்காலத்தைக் குறித்து நம்பிக்கையுடன் வாழ்ந்தவர். பொறுமையுடனும் தாழ்மையுடனும் வாழ்ந்தவர்.

## மகதலேனா மரியாள்

உதவி செய்யக்கூடியவர், எளிமையானவர், பணிவிடை செய்பவர், அன்புமிக்கவர், பிசாசின் போராட்டத்திலிருந்து இயேசுவால் விடுவிக்கப்பட்டவர். மார்த்தாள். சமையல் தொழில் செய்பவர், பணிவிடை செய்பவர், மிகுந்த தைரியத்துடன் செயல்படக் மூடியவராய் இருந்தார்.

## முடிவுரை

இறைவன் இப்பூமிக்கு வருவதற்கு கன்னி (மரியாள்) ஒரு பெண் தாயாக செயல்படுகிறார். பணிவிடை செய்ய சகோதரிகளும், இயேசு உயிர்த்தெழுந்த போது பெண்களே முதலில் தரிசனம் கண்டனர். நற்குணம், சுறுசுறுப்பு, கவனமாய் இருத்தல், உபசரித்தல், உதவி செய்தல், அன்பு, பொறுமை, தாழ்மை, உண்மை, வாய்மை, நேர்மை, தூய்மை, இரக்கம், தயவு, பணிவு, பாசம், கருணை, சமாதானம், சாந்தம், நற்குணம், இச்சையடக்கம் போன்ற பல்வேறு நற்செயல்களை செய்து நன்மையடைய வேண்டும் என்பது இக்கட்டுரை உணர்த்துகிறது.

## References

பரிசுத்த வேதாகமம், பழைய ஏற்பாடு, நீதிமொழிகள் 31: 5 - 8.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License